**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை</u>**

**<u>அசல் வழக்கு எண்.112 /2017</u>**

DW 1 – திரு.மைக்கேல் நாள். 06.03.2026

(1969ம் ஆண்டில் 44வது பிரிவின்படி) திரு.J.அந்தோணி ரிஷான்தேவ், பி.பி.ஏ., எல்,எல்.,பி. (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற (இளநிலை உதவியாளர்) திருமதி.ராமு என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. நான் பிறந்ததிலிருந்துதற்போது வரை கற்காத்தகுடியில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். சர்வே எண் 90 ல் குழந்தைசாமிக்கு கிழமேல் காலடி 12 தென்வடல் காலடி 35 அடி பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. அவர் எங்களுக்கு அந்த இடத்தை வாய்மொழியாக கொடுத்துவிட்டார். (அதன்பின் சாட்சி எனக்கு நியாபகம் இல்லை என தெரிவித்தார்). மேற்படி இடத்தை குழந்தைசாமி மெக்கேலுக்கு கிரையம் கொடுததார் என்றால் சரியல்ல. மெக்கேல் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை எங்களுக்கு கிரையம் கொடுத்தார். குழந்தைசாமி எங்களுக்கு வாய்மொழியாக அந்த இடத்தை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண் 90 ல் தைனஸ்யம்மாளுக்கு கிழமேல் காலடி 20 தென்வடல் காலடி 35 அடி பாத்தியப்பட்டது என்றால் அந்த இடம் தாவா சொத்திற்கு வடக்கே உள்ளது. மேற்படி இடத்தை தைனஸ்யம்மாள் அந்த இடத்தை மெக்கேலுக்கும், இன்னாசிக்கும் 05.06.1970ல் கிரையம் கொடுத்தார் என்றால் தாவா சொத்திற்கு வடக்கே உள்ள இடத்தை பொறுத்து எனக்கு தெரியாது. அது தாவா சொத்து இல்லை.

2. மெக்கேல்உடையாரும் இன்னாசிஉடையாரும் சகோதரர்கள் என்றால்சரிதான். மேற்படி மெக்கேலும் இன்னாசியும் குழந்தைசாமியிடமும், தைனஸ்யம்மாளிடமும் கிரையம்பெற்ற சொத்தை அனுபவம் செய்தார்கள் என்றால் அந்தவிவரம் எனக்கு தெரியாது.தேசிய நெடுஞ்சாலைக்கு அந்த இடத்தை எடுத்துவிட்டார்கள். மேற்படி

இடத்தை மெக்கேலும் இன்னாசியும் கூட்டாக அனுபவம் செய்து அதன்பின் வாய்மொழியாக பிரித்து கொண்டாாகள் என்றால் அதற்கும் தாவா சொத்திற்க்கும் சம்மந்தம் கிடையாது. மேற்படி இடத்தை மெக்கேலும் இன்னாசியும் கூட்டாக அனுபவம் செய்து அதன்பின் வாய்மொழியாக பிரித்து கொண்டார்கள் என்றும் அதனபின் தாவா சொத்தானது வாதியின் தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. வழக்கானது எவ்வளவு விஸ்திரன சொத்திற்கு போடப்பட்டுள்ளது என்றால் 3 செண்ட் இடத்திற்கு போட்டுள்ளார்கள். வாதியின் தகப்பனார் மெக்கேலும் வாதியும் தங்கள் சொத்துகளை பொறுத்து குடும்ப ஏற்பாடு ஆவணம் எழுதி கொண்டார்கள் என்றால்சரியல்ல. மேற்படி குடும்ப ஏற்பாட்டின் படி தாவா சொத்தானது வாதிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கின் 2 பிரதிவாதி எனது சகோதரர் என்றால் சரிதான்.

3. அவருக்கு எப்போது குருபட்டம் கொடுக்கப்பட்டது என்றால் சுமார் 30 வருடங்கள் இருக்கும். தற்போது அவர் ராஜஸ்தான் மாநிலம் அஜ்மீரில் பங்கு தந்தையாக உள்ளார் என்றால் சரிதான். பிராதில் வாதி மேற்படி சகோதரர் குருவாக உள்ளார் என்ற விவரத்தை சொல்லியுள்ளார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் 2ம்பிரதிவாதி ராஜஸ்தான் மாநிலத்தில் பங்குதந்தையாக உள்ள விவரத்தை தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். பத்திரம் எழுதும் போது குடும்ப அட்டையை பார்த்து எழுதினார்கள் அதனால் அதில் குறிப்பிடவில்லை. நான் சார்பதிவாளர் அலுவலகத்தில் 2ம் பிரதிவாதியின் உண்மையான முகவரியை கொடுக்கவில்லை என்றால சரியல்ல. பி.வா.சா.ஆ.4 ஆவணம் 12.02.2014 ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான்.வாதி காவல்துறையில் பணியாற்றி ஓய்வுபெற்று சென்னையில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். கற்காத்தகுடி கிராமத்தில் வாதிக்கு சொத்துகள் உள்ளது என்றும் அவர் அங்கு வந்துசெல்வார் என்றால் சரிதான். வாதி என்னிடம் வந்து 2014 ஆண்டு கேட்டபோது தாவா சொத்தை நான் 2ம் பிரதிவாதிக்கு கொடுத்துவிட்டதாக தெரிவித்தேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 ஆவணத்தின் மூலம் 2ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை கொடுத்தபோது தாவா சொத்திற்கு எனது பெயரில் பட்டா இருந்தது.

4. பி.வா.சா.ஆ.2 ஆவணத்திற்கு முந்தைய காலத்தில் உள்ள பட்டா எதையும் வழக்கில்

தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து எனக்கும் வாதிக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால் பிரச்சனை ஏற்படவில்லை எனது சொத்தை அனுபவம் செய்யகூடாது என வாதியிடம் சொன்னேன். எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு வாதியிடமிருந்து அனுப்பப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கறிஞர் அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். எனக்கு உடல்நலம் சரியில்லாததால் அனுப்ப இயலவில்லை. பி.வா.சா.ஆ.4 ஆவணத்திற்கு பிறகு 2ம்பிரதிவாதி பெயரில் தாவா சொத்திற்கு வருவாய் ஆவணங்கள் ஏற்படவில்லை என்றால் சரிதான்.எனது பெயரில் தான் உள்ளது. பி.வா.சா.ஆ.4 ஆவணம் பெயரளவில் ஏற்பட்டது என்றும் 2ம்பிரதிவாதி அதில் கண்டுள்ள சொத்தை அனுபவம் செய்யவில்லை என்றால் 2ம் பிரதிவாதி வெளியூரில் உள்ளதால் அனுபவம் செய்யவில்லை நான் தான்அனுபவம் செய்கிறேன். வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை அபகரிக்கும் நோக்கத்தோடு பி.வா.சா.ஆ.4 ஆவணம் என்னால் ஏற்படுத்தப்பட்டுள்ளதால் அது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

(ஓம்/திரு.J.அந்தோணி ரிஷான்தேவ்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை